(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

ஆண்டுப்பட்டிகை
பல்வகை
முதன்மைப் பதிவேடு
அமர்வு

CC.No. 1155/2020

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | துரைபாண்டியன் |
| த/பெ | : | சிதம்பரம் |
| கிராமம் | : | தெற்குகருங்குளம் |
| வட்டம் | : | இராதாபுரம் |
| சாதி | : | தேவர் |
| அழைத்தல் | : | தலைமை காவலர் |
| மதம் | : | இந்து |
| வயது | : | 40 |

**(எதிரி ஆஜர் )**

2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது தெற்கு கருங்குளத்தில் வசித்து வருகிறேன், நான் தற்போது அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 2018ம் ஆண்டு கூடங்குளம் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். 08-08-2018ம் தேதி 8.30 மணிக்கு கூடங்குளம் காவல் நிலைய எல்கைக்குட்பட்ட தோட்டவிளை பகுதியில் மணல் திருட்டு சம்பந்தமாக நானும், கூடங்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் காவலர் ரமேஷ், ஆகியோரும் சேர்ந்து ரோந்து செல்லும் போது தோட்டவிளை விலக்குக்கு கீழ்பக்கம் உள்ள நம்பியாற்று பாலத்துக்கு வடக்கே மேற்படி எதிரி பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட கன்னியாகுமரி மாவட்டம் சுண்டன்பரப்புவிளையை சேர்ந்த அய்யர்கோவில் தெருவை சேர்ந்த சுடலைமாடன் மகன் சுயம்புலிங்கம் என்பவர் டிஎன் 22 சிடி 4519 பஜாஜ் டிஸ்கவர் என்ற இரு சக்கர வாகனத்தில் 3 சணல் சாக்கு பையில் ஆற்று மணலை எந்தவித அரசு அனுமதியின்றி ஏற்றிக் கொண்டிருந்தார். எங்களை பார்த்ததும் ஓட எத்தனித்தவரை நாங்கள் மடக்கி பிடித்த போது அவர் சுமார் 500 ரூபாய் மதிப்புள்ள 1/4 யூனிட் மணல் ஏற்றி கொண்டிருந்தார். காரணம் கூறி கைது செய்து வழக்கு சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அத்தாட்சியில் பொது மக்கள் யாரும் கையெழுத்து செய்யாததால் நானும், காவலர் ராஜபகதீஸ்வரன் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியையும், கைபற்றப்பட்ட பொருள்களையும் நிலையம் கொண்டு வர உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1) வழக்கின் விசாரணை அதிகாரி எங்கள் நிலைய உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். அவர்தான் வழக்கின் புகார்தாரர் என்றாலும் சரிதான். அவர் என்னுடைய உயர் அதிகாரி என்றால் சரிதான். நான் சாட்சியாக கையொப்பம்

செய்த அத்தாட்சியில் வழக்கு சொததுக்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றபட்டதாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நாங்கள் சென்ற போது வழக்கு சொத்து யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்று எனக்கு தெரியாது.

2) உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்த போது அத்தாட்சி பிறப்பித்த சமயம் காவலர் ரமேஷ் உடனிருந்ததாக நான் குறிப்பிடவில்லை. நான் கையொப்பம் செய்த அத்தாட்சியல் அவர் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் ரோந்து செல்லவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்கள் கைப்ற்றபடவில்லை என்றாலும் அதனால் தான் எனது முதல் விசாரணையில் காவலர் ரமேஷ் உடனிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. அத்தாட்சி சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்பது தற்போது நினைவில்லை. ரோந்து பணிக்கு எங்களது இரு சக்கர வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளரும் இரு சக்கர வாகனத்தில் தான் வந்தார். காவலர்கள் அவர்களுக்கு பணிக்கப்பட்ட பணியை பொறுத்து அவர்கள் வைத்திருக்கும் பணி குறிப்பேட்டு ஆவணத்தில் குறிப்பது என்றால் சரிதான். எனது நாட்குறிப்பேட்டை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் நினைவில்லை. வழக்கு சம்பவத்தின் போது நான் நிலைய பணியில் இல்லை என்றாலும், அதனால்தான் எனது நாட்குறிப்பேட்டை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. விசாரணை அதிகாரி எனது உயர் அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) உதவி ஆய்வாளரே புகார்தாரராகவும் விசாரணை அதிகாரியாகவும் உள்ள வழக்கில் நான் அத்தாட்சியாக அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல மேற்படி விசாரணை இயற்கை நீதிக்கு முரணானது என்றால் சரியல்ல. 1/4 யூனிட் மணலை இரு சக்கர வாகனத்தில் கொண்டு செல்ல இயலாது என்றால் சரியல்ல. எதிரியின் ஊருக்கும் சம்பவ இடத்துக்கும் சுமார் 30 கிமீ தூரம் இருக்கும். 30 கிமீ தூரம் சணல் சாக்கில் இரு சக்கர வாகனத்தில் 3 சாக்குபைகள் மணலை எடுத்து செல்வது என்பது சாத்தியமில்லாதது என்றால் சரியல்ல. ஒரு மூட்டை சாக்கில் சுமார் 60 கிலோ மணல் இருக்கும். தனிநபர் இரு சக்கர வாகனத்தில்

60 கிலோ எடையுள்ள மணலுடன் கூடிய 3 சாக்கை இரு சக்கர வாகனத்தில் ஏற்றியதாக கூறுவது சாத்தியமில்லாதது என்றால் சரியல்ல.

4) எங்கள் காவல் நிலையத்திற்கு கீழ்பக்கமும் மேற்கு பக்கமும் பல வழக்குகளில் கைப்பற்றப்பட்ட மணல் குவித்து வைக்க்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அவ்வாறு குமித்து வைக்கப்பட்டுள்ள மணலை கொண்டு கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கு வேறு திருட்டு வழக்குகள் கிடையாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பநதமும் கிடையாது என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி எனது உயர் அதிகாரி என்பதால் அவருக்கு பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அத்தாட்சி வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில்வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.